



புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | டிசம்பர் 03, 2020 | புரட்சி 19 | முழக்கம் 19 | விலை: ரூ.3.00


## வருகிறது, சமஸ்கிருத செய்தி

தமிழ்க் கடவுள் முருகனுக்காக பா.ஜ.க. முருகன் வேல் தூக்கினார்; யாத்திரை போனார்; பக்திப் பரவசத்துடன் பெண்கள் குத்தாட்டம் போட்டார்கள்; பா.ஜ.க. தொண்டர்களின் 'பரத நாட்டியமும்' ஆங்காங்கே நடந்தது. அந்த கண் கொள்ளாத பக்திப் பரவசக் காட்சிகளை தொலைக்காட்சிகளில் 'தரிசிக்கும்' 'பெரும் புண்ணியம்' கிடைத்தது. கையில் தூக்கிச் சென்ற 'அட்டை' வேலை (வேல்) 'கர்ப்பகிரகத்துக்குள்' கொண்டு போக துடித்தார் முருகன். அர்ச்சகர்கள் மறுத்து விட்டார்களாம். 'கர்ப்பகிரகத்துக்குள்' இருக்கும் 'மூல விக்ரகத்தை' படம் பிடிக்கக் கூடாது என்பது அய்தீகமாம். ஆனால், பா.ஜ.க. முருகன், தனது முகநூல் பக்கத்தில் 'மூல விக்ரகமான முருகனை' படம் பிடித்துப் போட்டார் (சில நாட்களில் அவரே நீக்கி விட்டார்). தமிழ்க் கடவுளை முன் வைத்து தமிழ்நாட்டு ஓட்டுகளை அள்ளி விடலாம் என்று கணக்கு போட்டார்கள். அ.தி.மு.க. – பா.ஜ.க. கூட்டணி அமீத்ஷாவால் உறுதியானதால், இப்போது யாத்திரையும் பாதியில் இரத்தாகிவிட்டது. 'முருகனை' நம்புவதைவிட அ.இ.அ.தி.மு.க.வை நம்பினால் கூடுதல் ஓட்டு கிடைக்குமே! நல்லாத்தான் கணக்கு போடுறாங்க.

"முருகன் தமிழ்க் கடவுள்; தமிழ்க் கடவுளை தி.மு.க. அவமதிக்கிறது" என்றெல் லாம் தி.மு.க. மீது பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டினார்கள். "முருகன்ஜி, தமிழ்க் கடவுள் முருகன் கோயிலில் ஏன் தமிழில் வழிபாடு இல்லை?" என்று எதிர் கேள்வி எழுந்தது. அந்தக் கேள்விக்கு பதிலே வரவில்லை.

இப்போது மற்றொரு சேதி. அரசு நடத்தும் மாநில மொழி தொலைக் காட்சிகளில் நாள்தோறும் 15 நிமிடம் சமஸ்கிருதத்தில் செய்தி ஒளிப்பரப்பாக இருக்கிறதாம். தமிழ் நாட்டு மக்களிடம் பா.ஜ.க.வின் சாதனைகளை பெருமைகளை 'சமஸ்கிருதத்தில்' சொன்னால் மக்கள் ஆதரவு அலை புயலாக வீசும் என்று முடிவு செய்து விட்டார்கள் போலிருக்கிறது! சரி, இருக்கட்டும்!

"8 கோடி இந்திய மக்களில் சமஸ்கிருதம் தெரியும் என்று பதிவு செய்தவர்கள் 15,000 பேர். இவர்களுக்காக ஒவ்வொரு மாநிலத் திலும் 15 நிமிடம் சமஸ்கிருதத்தில் செய்தி அதுவும் பெரும்பான்மை இந்துக்களுக்குப் புரியாத மொழியில்! இதுதான் பெரும்பான்மை இந்துக்களின் உணர்வுகளை மதிக்கும் இலட்சணமா?", "நாங்கள் பெரும்பான்மை இந்துக்கள்" என்று மூச்சு முட்ட முழங்கும் எந்த 'சங்கி'களும் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கப் போவது இல்லை. தமிழ்க் கடவுளுக்காக 'யாத்திரை' போனவர்களும் கேட்க மாட்டார்கள்! ஆக, என்ன நடக்கப் போகிறது?

ஏராளமான 'பிராமணர்'களை செய்தி வாசிப்பாளர்களாகப் பார்க்கும் கண்கொள்ளா காட்சி கிடைக்கப் போகிறது. கொழுத்த சம்பளம் கிடைக்கும்; புரோகிதத்தைவிட கூடுதல் வருவாய் தான்! அர்ச்சகர்களேகூட அதே கோலத்தில் வந்து சமஸ்கிருதத்தில் செய்தி வாசித்தால் எப்படி இருக்கும்? நினைத்தாலே உடல் புல்லரிக்குது போங்க...

ஆனாலும் மோடி அருமை பெருமைகளை சமஸ்கிருதத்தில் கூறும் போது அதைப் புரிந்து கொள்ளும் 'சக்தி' பாமர ஓட்டர்களுக்கு இல்லையே என்பதுதான் நமது கவலை!

கடவுள்களுக்கு மட்டும்தான் அந்த சமஸ்கிருதச் செய்தி புரியும். கடவுளுக்குத் தெரிந்தது ஒரு மொழி கொள்கை தானே! ஆனாலும் அவர்கள் எல்லாம் வாக்குச் சாவடிக்கு வந்து கியூவில் நின்று வாக்களிக்க முடியாதே! பாவம்! கர்ப்பகிரகத்துக்குள்ளேயே பல நூறு ஆண்டுகளாக முடங்கிக் கிடக்கிறார்கள்! அதே அர்ச்சனை; அதே படையல்!

சரி விடுங்க; அடுத்த வேலையைப் பார்ப்போம்! "சமஸ்கிருதத்தைப் போற்று; பெரும்பான்மை இந்துக்களைத் தூற்று" என்ற முழக்கத்துடன் யாத்திரைக்குத் தயாராவோம்!

**– கோடங்குடி மாரிமுத்து**

# புலியூரில் மாவீரர்கள் வீரவணக்க நாள்

மாவீரர் நாள் 27.11.2020 அன்று மாலை சேலம், மேட்டூர், கொளத்தூர் புலியூர் பிரிவில் அமைந்துள்ள தளபதி பொன்னம்மான் நினைவு நிழற்கூடத்தில் மாவீரர் நாள் வீரவணக்கம் செலுத்தும் நிகழ்வு நடை பெற்றது.



சரியாக மாலை 6.05 மணிக்கு மாவீரர் பாடல் ஒலிப்புக்கு பின் கூடியிருந்த உணர்வாளர்கள் வீரவணக்கம் செலுத்தினர். அதனை தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழீழ விடுதலை போராட்டம் குறித்தும் போராளிகளின் இலட்சியக் கொள்கை, விடுதலைப் புலிகள் எதிர் கொண்ட துரோகம், துரோகிகளை அடையாளம் கண்டது, அடுத்தகட்ட அரசியல் குறித்து உரையாற்றினார். நிகழ்வை தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்புக் குழு ஏற்பாடு செய்திருந்தது. நிகழ்விற்கு, கோவை, திருப்பூர், ஈரோடு, சேலம், நாமக்கல் ஆகிய பகுதி கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை** : சென்னை மாவட்டக் கழகம் சார்பில், மாவீரர் நாள் நிகழ்வு, இராயப் பேட்டை வி.எம்.தெரு பெரியார் படிப்பகத்தில், 27.11.2020 அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது.

தலைமைக் குழு உறுப்பினர் அன்பு தனசேகர் சுடர்ஒளி ஏற்றி மாவீரர் நாள் பற்றி உரையாற்றினார். நிகழ்விற்கு தென் சென்னை மாவட்டச் செயலாளர் உமாபதி தலைமை வகித்தார். தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக் குழு உறுப்பினர் அய்யனார், தென் சென்னை மாவட்டத் தலைவர் மா.வேழவேந்தன், தென் சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மயிலை சுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வை, திருவல்லிக்கேணி பகுதி பொறுப்பாளர் அருண் மற்றும் கழகத் தோழர் கன்னியப்பன், இராஜேஷ் ஆகியோர் ஒருங்கிணைத்தனர். இராயப்பேட்டை, மயிலாப்பூர் பகுதி கழகத் தோழர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.



# சட்டம் எரித்து சிறை புகுந்த ஜாதி ஒழிப்புப் போராளிகளுக்கு வீரவணக்கம்

**கோவை** : பெரியாரின் அறிவிப்பை ஏற்று ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை கொளுத்தி சிறை சென்று துயரங்களை அனுபவித்து சிறையிலும், சிறைக்கு வெளியேயும் உயிர்நீத்த போராளிகளை நினைவு கூர்ந்து கோவை மாநகர திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் 26.11.2020 அன்று காலை 10 மணியளவில் வீரவணக்கம் செலுத்தப் பட்டது. நிகழ்வுக்கு தலைமைக் குழு உறுப்பினர் சூலூர் பன்னீர்செல்வம் தலைமையேற்று உரையாற்றினார். மாநகர செயலாளர் நிர்மல் வரவேற்பு கூறினார்.




மேட்டுப்பாளையம் இராமச் சந்திரன், நேரு தாசு, உடுமலை இயல் ஆகியோர் சட்ட எரிப்புப் போராளிகளைப் பற்றியும் போராளிகளின் தியாக உணர்வுடன் எதிர்கால வேலைத் திட்டங்கள் பற்றியும் உரையாற்றினர். இறுதியாக வெங்கட் நன்றி கூறினார். நிகழ்வில் தோழர்கள் சுரேஷ், ரஞ்சித், சதீஷ், ராஜா ராமச்சந்திரன், கண்ணன், முருகேஷ் கலந்து கொண்டனர்.

**அன்னூர்** : கோவை அன்னூர் பகுதியில் தமிழ்நாடு மாணவர் கழகப் பொறுப்பாளர் விஷ்ணு ஒருங்கிணைப்பில், 26.11.2020 அன்று காலை 10 மணியளவில் அன்னூர், நல்லி செட்டி பாளையத்தில் வீரவணக்க நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் நல்லி சிட்டிபாளையம் பகுதி தோழர்கள் கலந்து கொண்டனர். சட்ட எரிப்பு குறித்து விஷ்ணு உரையாற்றினார். பின் முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

### மாணவர் கழகம் நடத்திய கருத்தரங்கு

தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில், சட்ட எரிப்புப் போராளிகளை நினைவு கூரும் வகையில் சட்ட எரிப்பு சிறப்புக் கருத்தரங்கம் இணைய வழியில் 29.11.2020 அன்று மாலை 6 மணியளவில் நடை பெற்றது. 'அரசியல் சட்டத்தில் மனுதர்மக் கூறுகள்' - திருப்பூர் சந்தோஷ், 'சட்ட எரிப்புப் போராட்டம் - பெரியாரின் பார்வை' - சென்னை அருண், 'சட்ட எரிப்புப் போராளிகளின் கொள்கை உறுதி' - கோவை விஷ்ணு, 'சட்டத்தைப் பாதுகாக்க புதுச் சட்டமா? மேட்டூர் மதிவதனி ஆகிய தலைப்புகளில் தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் கருத்துரை வழங்கினர். இறுதியாக கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரையாற்றினார். நிகழ்விற்கு திருப்பூர் தேன்மொழி தலைமை வகித்து நிகழ்வையும் ஒருங்கிணைப்பு செய்தார்.



தலையங்கம்

## ‘லவ் ஜிகாத்’ என்ற பெயரில்...

‘லவ் ஜிகாத்’, ‘கட்டாய மதமாற்றம்’ என்ற சொல்லாடல்கள் வழியாக இந்துத்துவா செயல் திட்டத்தை முன்னெடுக்கிறது பா.ஜ.க. ஆட்சி! உ.பி. பா.ஜ.க. ஆட்சி ‘கட்டாய மதமாற்றத் தடுப்பு; அவசரச் சட்டம் 2020’ என்ற சட்டத்தை ஆளுநர் வழியாக பிறப்பித்து, அந்த சட்டத்தின் கீழ் முதல் வழக்கையும் இஸ்லாமியருக்கு எதிராக ஒரே வாரத்தில் பதிவு செய்துள்ளது. ம.பி., அரியானா, கருநாடகம், பீகார் மாநிலங்களிலும் இத்தகைய சட்டங்கள் கொண்டு வரப்பட இருப்பதாக செய்திகள் வருகின்றன. “நேர்மையற்ற முறையில் மதமாற்றம் செய்வோருக்கு 10 ஆண்டு சிறை; திருமணத்தின் பெயரால் மதமாற்றம் செய்வதும் இதில் அடங்கும்” என்று உ.பி. அரசின் அவசர சட்டம் கூறுகிறது.

உண்மையில், ‘லவ் ஜிகாத்’ என்று பா.ஜ.க. பரிவாரங்கள் பயன்படுத்தும் சொல் சட்டத்தில் கிடையாது. இந்திய அரசியல் சட்டத்தின் 21ஆவது பிரிவு, ஒருவர் பொது ஒழுங்கு அறநெறிக்கு உட்பட்டு ஒருவர் விரும்புகிற மதத்தைப் பின்பற்றும் உரிமையை வழங்குகிறது. கேரள உயர்நீதிமன்றம் உள்பட பல்வேறு நீதிமன்றங்கள் தீர்ப்புகள் வழியாக இதை உறுதி செய்திருக்கின்றன. இவ்வாண்டு துவக்கத்தில் ‘லவ் ஜிகாத்’ என்ற திருமணத்துக்காக மதம் மாறும் வழக்கம் இந்தியாவில் இல்லை என்றும் மத்திய புலன் விசாரணை அமைப்புகள் விசாரணைக்குப் பிறகு இதைத் தெரிவித்திருப்பதாகவும், மத்திய உள்துறை அமைச்சகமே நாடாளுமன்றத்தில் அறிவித்ததை சுட்டிக்காட்ட வேண்டும். இல்லாத ஒன்றுக்கு அவசரச் சட்டம் இயற்றும் அளவுக்கு பா.ஜ.க. ஆட்சியினர் மதவெறி கொண்டு நிற்கிறார்கள். அண்மையில் அலகாபாத் உயர்நீதிமன்றம், ‘திருமணம் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு மதம் மாறுவது ஏற்றுக் கொள்ள முடியாது’ என்று ஒரு தீர்ப்பில் கூறியுள்ளதை தனக்கு சாதகமாக எடுத்துக் கூறுகிறார் உ.பி. முதலமைச்சர் ஆதித்யநாத். இது நீதிபதியின் கருத்தாக இருக்கலாமே தவிர, சட்டத்தின் முன் நிற்காது என்று உ.பி. மாநில சட்ட ஆணையத்தின் தலைவரும் ஓய்வு பெற்ற நீதிபதியுமான ஆதித்யநாத் மிட்டர் கூறியிருக்கிறார். மதங்களைக் கடந்து திருமணம் செய்வோர் எண்ணிக்கை இந்தியாவில் 2 சதவீதத்துக்கும் குறைவு என்றே புள்ளி விவரங்கள் கூறுகின்றன.

சொல்லப்போனால், இந்தியாவில் ‘இந்துக்கள்’ என்ற பட்டியலுக்குள் திணிக்கப் பட்டவர்களே கட்டாய மதமாற்றத்துக்கு உள்ளானவர்கள்தான். சைவம், சமணம், பவுத்தம் என்று பல்வேறு மதக் குழுக்களைச் சார்ந்தவர்களை கட்டாயப்படுத்தி ‘இந்து’க்கள் ஆக்கியதோடு ஒவ்வொரு ‘இந்து’வின் மீதும் கட்டாயப்படுத்தி ஜாதியையும் திணித்து வைத்திருக்கிறது ஆரியர்களின் வைதீக மதமான வேதமதம்!

மதம், கடவுள் மறுப்பாளர்களையுமேகூட விட்டு வைக்காமல் கட்டாய ‘இந்து’க் களாக்கப்பட்டு விட்டார்கள்.

ஒரு ஜாதியிலிருந்து வேறு ஒரு ஜாதிக்கு ஒரு இந்து மாறவே முடியாது. இப்படி ஒரு சமூக அமைப்பை ஏன் உருவாக்கினார்கள்? ‘பிராமணர்கள்’ என்ற சமூக மேலாதிக்கப் பிரிவு மாறாத் தன்மையுடன் காலங்காலமாக நிலைத்து நிற்க வேண்டும் என்ற உள் நோக்கத்துடனேயே இப்படி ஒரு ஏற்பாட்டை பார்ப்பனியம் கட்டமைத்துள்ளது.

ஜாதியையும் பார்ப்பன மேலாதிக்கத்தையும் இந்து மதத்தோடு கட்டாயப்படுத்தி கட்டிப் போட்டு வைத்திருப்போர் கட்டாய மதமாற்றம் என்று கூக்குரலிடுவதில் அர்த்தமில்லை.

கட்டாய மதமாற்றத் தடை பேசுவோர் கட்டாய வேலை வாய்ப்பு பற்றி பேசுவதில்லை; கட்டாய மனித உரிமைப் பற்றி கவலைப்படுவதில்லை; ஜாதி வெறித் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த முன் வருவதில்லை; குடியுரிமை திருத்தச் சட்டத்தில் கட்டாயமாக இஸ்லாமியர்களை மட்டும் தனிமைப்படுத்தியவர்கள் இவர்கள்தான்.

மதச்சார்பற்ற ஒரு நாட்டை கட்டாயப்படுத்தி மதவாத நாடாக மாற்றும் இவர்களின் முயற்சிகளை கட்டாயம் மக்கள் முறியடிப்பார்கள்!

# மக்கள் விரோத சக்திகளுக்கு எதிரான ஆயுதம் – பெரியார் : எம்.சி.பி.அய்.(யு) கட்சியின் முடிவு

2000ஆம் ஆண்டில், சிபிஎம் எடுத்த, ‘சமரசத்துடன் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளுதல்’ என்ற புதிய கொள்கை முடிவு, அக்கட்சிக்குள் ஏற்படுத்திய அதிருப்தியை தொடர்ந்து, இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் அக்கட்சி உடைந்தது. பஞ்சாபில், சிபிஎம் (பஞ்சாப்) கட்சியும், ஆந்திராவில் எம்சிபிஐ கட்சியும், தமிழகத்தில் கம்யூனிஸ்ட் பேரவையும், கேரளாவில் இஎம்எஸ் ஏகேஜி பேரவையும் அவ்வாறு தோன்றியவையில் சில.

இந்த நான்கு கட்சிகள் 2004இல் கேரள மாநிலம் ஆலுவாயில் ஒன்றிணைந்து விவாதித்தன. 2005இல் இக்கட்சிகள் இணைந்து எம்சிபிஐ (யுனைட்டெட்) உதயமானது.

இந்தியாவில் உள்ள கம்யூனிஸ்ட் இயக்கங்கள் ஜாதியற்ற சமூகம் (classless society) என்பதை முன்வைத்து இயங்க, எம்சிபிஐ (யு) வர்க்கபேதமற்ற (classless) மற்றும் ஜாதியற்ற சமூகத்தை (casteless society) முன் வைக்கிறது. வர்க்கரீதியில் சமநிலையில் இருந்தாலும், சாதி அடிப்படையில் அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வு நிலவுவதை சுட்டிக் காட்டி, சாதிய பாகுபாடு ஒழியும்வரை சமூகநீதி சாத்தியமில்லை என்பதை வலியுறுத்துகிறது.

> **இக்கட்சி எடுத்த மற்றுமொரு முக்கிய தீர்மானம், சமூக மறுகட்டமைப்புக்காக போராடிய அம்பேத்கர், பெரியார் இருவரையும் முன்வைத்து போராடுவது. தமிழகத்தில் கம்யூனிஸ்ட் இயக்கங்களின் சரிவுக்கு பெரியாரையும், அவரது கொள்கைகளையும் புறக்கணித்ததே முக்கிய காரணம் என அக்கட்சி அறிவுறுத்துகிறது.**

இக்கட்சி எடுத்த மற்றுமொரு முக்கிய தீர்மானம், சமூக மறுகட்டமைப்புக்காக போராடிய அம்பேத்கர், பெரியார் இருவரையும் முன்வைத்து போராடுவது. தமிழகத்தில் கம்யூனிஸ்ட் இயக்கங்களின் சரிவுக்கு பெரியாரையும், அவரது கொள்கைகளையும் புறக்கணித்ததே முக்கிய காரணம் என அக்கட்சி அறிவுறுத்துகிறது. சாதி, மத பிரிவினை சக்திகள் வலிமை பெற்றிருக்கும்; இக்காலகட்டத்தில் பெரியார், அம்பேத்கரின் தேவையை கட்சி பூரணமாக உணர்ந்துள்ளது. முக்கியமாக இந்த மக்கள் விரோத சக்திகளுக்கு எதிரான ஆயுதமாக பெரியாரை கட்சி நம்புகிறது.

இந்தியாவில் சிபிஎம் கட்சியின் நலிவுக்கும், சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் ஆதிக்க மனோபாவத்துக்கும் “பிராமணியமே” தலையாய காரணம் என்று எம்சிபிஐ (யு) ஐயமற நம்புகிறது. பிராமணிய எதிர்ப்பை தனது அடிப்படை கூறுகளில் ஒன்றாக அக்கட்சி வரையறுத்துள்ளது.

எம்சிபிஐ (யு) இன் தமிழக மாநிலத் தலைவராக ஜார்ஜ் உள்ளார். தமிழகத்தில், குமரி மாவட்டம் குழித்துறையை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் இக்கட்சி, லூயி துப்புரவுத் தொழிலாளர்கள் நலச்சங்கத்தை கடந்த ஏழு வருடங்களாக நடத்தி வருகிறது. தற்போது இச்சங்கம் குமரி, நெல்லை, தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் மிகுந்த ஊக்கத்துடன் செயல்பட்டு வருகிறது, பல மாநில மாநாடுகளையும் நடத்தியுள்ளது. கட்சியின் குமரி மாவட்ட செயலாளரும், மத்தியக்குழு உறுப்பினருமான வழக்கறிஞர் சுலிஃப் சங்கத்தை வழி நடத்துகிறார்.

கட்சியின் தலையீடு இல்லாமல், தொழிலாளர்களே சங்கத்தின் நிர்வாகிகளை தீர்மானிக்க வேண்டும் என்பது இச்சங்கத்தின் அடிப்படை விதி. துப்புரவுத் தொழிலாளர்களை ஒன்றிணைத்து போராட தூண்டாமல், அவர்களுக்காக சட்டரீதியாக போராடி, உரிமைகளை பெற்றுத் தருவது என்பதில் சங்கம் உறுதியாக உள்ளது.

பலன் சார்ந்து இயங்கும் சாதிக்கட்சிகள், அரசியல் கட்சிகளுக்கு நடுவில் சமரசமற்று ஒரு சங்கத்தை நடத்திச் செல்வது சவாலானது. ஏழு வருட அனுபவத்தில் சமரசமற்று சமூகப் பணி செய்கிறவர்கள் என கட்சியும், சங்கமும் அடையாளம் கண்டு கொண்டது பெரியாரிஸ்டுகளை மட்டுமே. பட்டியலின மக்களிடையே தற்போது மதவாத சக்திகள் கடவுள் மற்றும் சடங்குகளின் பெயரில் ஊடுருவ ஆரம்பித்துள்ளனர். இதற்கு எதிரான வலுவான ஆயுதமாக பெரியார் இருப்பார், பெரியாரிஸ்டுகளின் துணையுடன் இவர்களை ஆக்கப்பூர்வமாக எதிர்க்க முடியும் என கட்சியும், சங்கமும் நம்புகிறது.

இந்தப் புரிதல்களின் அடிப்படையில் பெரியாரின் நினைவுதினமான டிசம்பர் 24ஐ ஆக்கப்பூர்வமான தினமாக்க கட்சி விரும்புகிறது.

## 7 வருடம் நடந்த வழக்கு: கோவை தோழர்கள் விடுதலை

இரட்டைக் குவளை, தாழ்த்தப்பட்டோருக்கு முடிவெட்ட மறுக்கும் சலூன் கடைகள் ஆகியவைகளை பட்டியலிட்டு ஜாதியக் கொடுமைகள் நடத்தும் உரிமையாளர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி 11.05.2013 அன்று காலை 11 மணியளவில் கோவை கிணத்துக்கடவு சிட்டி பேக்கரி அருகில், தடையை மீறி சூலூர் தமிழ்ச்செல்வி தலைமையில் தோழமை அமைப்புகளுடன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.




திராவிடர் விடுதலைக் கழகம், ஆதித்தமிழர் பேரவை, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி என 67 தோழர்கள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட 67 தோழர்கள் மீதும் காவல்துறை வழக்கு பதிவு செய்தது.

தொடர்ந்து 7 வருடங்களாக வழக்கு நடைபெற்று வந்த நிலையில் 27.11.2020 அன்று அனைவரும் விடுதலை என தீர்ப்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து 7 வருடங்களாக வழக்கறிஞர் பொள்ளாச்சி பிரபு பணம் ஏதும் பெறாமல் இலவசமாகவே வழக்கை நடத்திக் கொடுத்தார்.

## கலைவாணரின் புரட்சி



கல்லடியும் சொல்லடியும் பட்டு மூன்று மணிநேரம் தொண்டைகிழியப் பேசியும் எவ்வளவு பேர் என் கருத்தை ஏற்றார்கள் எனத் தெரியாமல் போகிறது. அதையே என்.எஸ்.கிருஷ்ணன் சினிமாவில் சொல்கிறார். மக்கள் காசு கொடுத்துச் சினிமா பார்த்து மகிழ்ச்சியாக இந்தக் கருத்துகளையெல்லாம் நன்கு தெரிந்து கொள்கிறார்கள். நான் நூறு கூட்டங்களுக்குப் போய் செய்யக் கூடியதை என்.எஸ்.கிருஷ்ணன் ஒரு படத்தின் மூலம் சாதித்து விடுகிறார்!

இவர் தனது தொழிலில் ஒரு மேதாவி என்றாலும், அதை நடத்தும் முறையில் ஒரு பெரிய புரட்சியாளர் என்றே சொல்ல வேண்டும். அதுவும் லெனின் செய்தது போன்ற புரட்சி என்றே சொல்ல வேண்டும்.

ஏனெனில் நாடகத்துறையிலும், கலைத்துறையிலும், இசைத் துறையிலும் ஒரு பெரிய புரட்சி ஏற்படுத்தி இருக்கிறார்.

**– தந்தை பெரியார்.**

கிருஷ்ணன் செத்தாலும் சரி, அவர் பணம் காசெல்லாம் நழுவி ‘அன்னக் காவடி கிருஷ்ணன்’ ஆனாலும் சரி, நாடகப் புரட்சி உலகைப் பற்றி சரித்திரம் எழுதப்பட்டால், அட்டைப் பக்கத்தில் கிருஷ்ணன் படம் போடாவிட்டால், அச்சரித்திரமே தீண்டப்படாததாக ஆகிவிடும்! **(‘குடிஅரசு’ 11.11.1944)**

வாழ்க கலைவாணர்! (கலைவாணர் பிறந்தநாள்: நவ–29)

**‘விடுதலை’ 17.5.1957**

## மாணவர் கழகக் கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் உரை (2)

# பார்ப்பனிய பாசிசத்துக்கு மாற்று – திராவிடம், சுயமரியாதை

***பொதுவுடைமைக் கொள்கைக்கு எதிராகவும் இனவெறிக் கொள்கைகளை உயர்த்திப் பிடிக்கவும் உருவான கருத்தாக்கங்களே பாசிசம் – நாசிசம் – ஜியோனிசம் – பார்ப்பனியம் என்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் விளக்கினார்.***

***தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் 27.09.2020 அன்று மாலை 6 மணியளவில், பெரியார் 142ஆவது பிறந்தநாள் விழா கருத்தரங்கம், "திராவிடம் தந்த கல்விக் கொடை, அதை சிதைக்க விடாது நம் பெரியார் படை" என்ற தலைப்பில் இணையவழியில் நடைபெற்றது. கருத்தரங்கத்தில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரை. சென்ற இதழ் தொடர்ச்சி.***

ஜியோனிசம் பேசிய யூதர்கள், இஸ்லாமியர்கள் ஆண்டு கொண்டிருந்த பாலஸ்தீன நாட்டில் உள்ள நிலங்களை உலகம் முழுவதிலும் உள்ள யூதர்கள் பெரும் தொகை கொடுத்து கொஞ்சம் கொஞ்சமாக வாங்கி பிறகு சட்ட விரோதமாக தங்களுக்கென்று "இஸ்ரேல்" என்ற நாட்டை உருவாக்கிக் கொண்டார்கள். ஹிட்லர், யூதர்களை வெறுக்கும் கொள்கையைக் கொண்டிருந்தார். எனவே இஸ்லாமியர்களை வெறுக்கும் ஜியோனிச கொள்கையைக் கொண்ட நாடாக மாறியது. இஸ்ரேல் பார்ப்பனியம் ஜியோனிசத்தோடும் கைகோர்த்து நட்புறவை வளர்த்துக் கொள்வதற்கு திட்டமிட்டு அதற்கான முயற்சிகளை பார்ப்பனியம் தொடங்கியது.

யூதர்கள் பேசிய இனப் பெருமையை ஹிட்லர் பேசிய இனப் பெருமையை முசோலினி போற்றிய இனவெறி இராணுவக் கட்டமைப்பை அப்படியே பார்ப்பனியமும் பேசுகிறது.

"மனித சமூகம் தழைக்க வேண்டும் என்பதற்காகவே வந்த ஆரியர்களாகிய நமக்கு, தொடக்கம் என்ற ஒன்றே கிடையாது. நமது இனம் எப்போது தோன்றியது என்பதை வரலாற்று ஆசிரியர்களாலேயே கண்டறிய முடியவில்லை. நம்மைத் தவிர மற்றவர்கள் இரண்டு கால் பிராணிகள்; அறிவற்றவர்கள்; மிலேச்சர்கள்; அவர்களிடமிருந்து நம்மைத் தனிமைப்படுத்தும் அடையாளமே ஆரியர்" என்று ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்தை உருவாக்கிய கோல்வாக்கர் எழுதி வைத்துள்ளார். (நூல்: Bunch of thoughts)

சொல்லப்போனால் பாசிசம் உருவாவதற்கு முன்பே வேதகாலத்தில் இதைவிட கொடூரமான 'பார்ப்பனியம்' என்ற சித்தாந்தத்தை வேத கால பார்ப்பனர்கள் இந்த சமூகத்தில் உருவாக்கிக் கொண்டுவிட்டார்கள். தங்களுக்கென்று ஒரு நாடு இல்லாவிட்டாலும் எந்த நாடாக இருந்தாலும் அந்த நாட்டினுடைய சமுதாய விதிகளை, சமுதாய கொள்கைகளை சமூக அமைப்பை நாங்கள் தான் நிர்வாகிப்போம், எங்களுக்கு அடிமைப்பட்டு நாங்கள் கூறுகிற வர்ணாஸ்ரம தர்மத்தின் கீழ் தான் ஒவ்வொரு பிரிவினரும் வாழ வேண்டும் என்று கூறி அதை மீறுகிறவர்களுக்கு சாஸ்திரப்படி என்ன தண்டனை என்று வரையறுத்து, இவை கடவுளால் படைக்கப்பட்ட கட்டளைகள் என்று மக்களை அச்சுறுத்தி இந்த கட்டளைகளை மீறுவதற்கு என்ன தண்டனை என்பதற்கு மனுசாஸ்திரங்களை உருவாக்கி நாட்டை ஆண்டு கொண்டிருந்த மன்னர்களை தங்கள் வசப்படுத்திக் கொண்டு தங்களுடைய பார்ப்பனிய சித்தாந்தத்தை அரசுகளின் வழியாக அதிகாரத்தின் வழியாக தாங்கள் பதவிக்கு போகாமலே அடக்கி ஒடுக்குகின்ற ஒரு மோசமான கொடூரமான அமைப்பை பாசிசத்திற்கு முன்பே இந்த நாட்டில் உருவாக்கியது பார்ப்பனியம். பார்ப்பனியம் என்பது பாசிசத்தின் தாய். (Mother of fascism is Brahmanism)

மூஞ்சே, முசோலினியை சந்தித்தது போலவே மற்றொரு வரலாற்று நிகழ்வும் நடந்தது. இஸ்ரேல் நாடு உருவானதை உலகத்தில் எந்த நாடும் அங்கீகரிக்கவில்லை. அது சட்ட விரோதமாக உருவாக்கப்பட்ட நாடு. அய்க்கிய நாடுகள் சபையும் அங்கீகரிக்கவே இல்லை. இந்தியாவும் நீண்ட நெடுங்காலமாக அங்கீகரிக்கவில்லை; தூதரக உறவும் இல்லை. இந்தப் பின்னணியில் 1977ஆம் ஆண்டு இந்தியாவில் மொராஜி தேசாய் ஆட்சியில் ஜனதா கட்சியின் ஆட்சி அமைந்தது. அப்போது அந்த அமைச்சரவையில் வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்தவர் வாஜ்பாய். வாஜ்பாயும் மொரார்ஜிதேசாயும் சேர்ந்து கொண்டு இந்தியா அங்கீகரிக்காத, இந்தியாவில் தூதரகம் துவங்குவதற்கு அனுமதி மறுக்கப்பட்ட அந்த இஸ்ரேல் நாட்டினுடைய வெளியுறவுத்துறை அமைச்சராக இருந்த 'மோஷி தயான்' என்பவரை சந்திப்பதற்கு இரகசியமாக திட்டமிட்டார்கள். இந்தியா அங்கீகரிக்காத நாடு; ஆனால் அந்த நாட்டின் வெளியுறவுத் துறை அமைச்சர் இந்தியாவிற்கு வருகிறார். அவர் வருவது என்பதே சட்டவிரோதம்.

**ஜனதா ஆட்சி காலத்தில் தூதரக உறவு இல்லாத இஸ்ரேல் நாட்டு வெளியுறவு அமைச்சரை சட்ட விரோதமாக இரகசியமாக இந்தியாவுக்கு அழைத்து பேசினார்கள் பிரதமர் மொரார்ஜியும் வெளியுறவுத் துறை அமைச்சர் வாஜ்பாயும்**

அவர் வேறு ஒரு பெயரில் போலியான 'கவுட் சீட்டை' (பாஸ்போர்ட்) எடுத்துக்கொண்டு இந்தியாவிற்கு, ஒரு பயணிகள் விமானத்தில் மும்பையில் வந்து இறங்கினார். அப்போது இந்தியாவின் வெளியுறவுத் துறை அமைச்சராக இருந்த வாஜ்பாய், போலி பாஸ்போர்ட், போலிப் பெயருடன் இந்தியா அங்கீகரிக்காத நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சரை மும்பையில் அரசாங்கத்தின் விமானப் படையை அனுப்பி வரவேற்றார்கள். அவரை வாஜ்பாயும் மொரார்ஜி தேசாயும் மூன்று முறை சந்தித்துப் பேசி 'நீங்கள் இஸ்லாமிய வெறுப்பில் தீவிரமாக இருக்கும் காரணத்தினால், இஸ்ரேலுக்கு எதிர்காலத்தில் நாங்கள் ஆதரவைக் கொடுப்போம்' என்ற உறுதியை அந்த சந்திப்பில் வெளிப்படுத்தினார்கள். பாசிசம், நாசிசம், ஜியோனிசம் ஆகியவற்றுடன் மிக நெருக்கமான தொடர்பை இந்துத்துவா பேசுகிற பார்ப்பனியம் வைத்துக் கொண்டே இருந்திருக்கிறது.

இன்றைக்கு நடந்து கொண்டிருக்கின்ற மோடியுடைய ஆட்சி, பாசிசம் நாசிசம் கூறிய கொள்கைகளை நாடாளுமன்றம் வழியாக எப்படி செயல்படுத்தலாம் என்பதற்கான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டே இருக்கிறது. நாடாளுமன்றம் என்ற அமைப்பைப் பயன்படுத்தி அதில் மெஜாரிட்டி பலம் கிடைத்தவுடன், தங்களுடைய பெரும்பான்மை எண்ணிக்கையை பயன்படுத்தி அவசர சட்டங்களைக் கொண்டு வந்து மாநிலங்களுடைய அடையாளங்களை முற்றாக அழித்து விடுவது, மாநிலங்கள் என்ற ஒன்றே இந்த நாட்டில் இருக்கக் கூடாது பெயரளவில் வேண்டுமானால் மாநிலங்கள் இருக்கலாம் ஆனால் அவற்றிற்கு உரிமைகளோ, அடையாளங்களோ இருக்கக் கூடாது என்பதற்கான முயற்சிகளை அவர்கள் துவங்கிவிட்டார்கள். அதற்காக மாநிலங்களுக்கென்று ஒரு கல்விக் கொள்கை இருக்கக் கூடாது; அதை நாங்கள் தான் தீர்மானிப்போம் என்று தேசிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்தார்கள். மாநிலங்களுக்கென்று வரி விதிப்புக் கொள்கை இருக்கக் கூடாது; அதையும் நாங்கள் தான் தீர்மானிப்போம் என்று கூறி ஜி.எஸ்.டி. வரியைக் கொண்டு வந்தார்கள். ஒரே நாடு ஒரே ரேசன் என்ற கொள்கையும் கொண்டு வந்தார்கள். இப்போது விவசாயத்தை அழித்து இந்தியா முழுவதும் ஒரே சந்தை என்று ஒரு திட்டத்தை கொண்டு வந்துள்ளனர். மாநிலங்களின் உரிமையில் இருந்த விவசாயம் தொடர்பான வர்த்தக உரிமை பறிக்கப்பட்டு விட்டது.

கல்லூரிக் கல்வி என்பது முழுவதுமாக மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு சேர்க்கப்பட்டுவிட்டது. தற்போது, இந்தியா முழுவதும் ஒரே பண்பாடு அது சமஸ்கிருத பண்பாடு என்பதற்காக பார்ப்பனர்களைக் கொண்டு ஒரு குழுவை அமைத்து அதை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். மாநில உரிமைகளின் கீழ் இருக்கக்கூடிய மின்சாரக் கொள்கையான மின்சார உற்பத்திக் கொள்கைகள் பறிக்கப்பட்டு வருகின்றன. மாநிலங்களினுள் இருக்கக் கூடிய பல்வேறு சுற்றுச்சூழல் உரிமைகளை பறித்து, இனி நாங்கள் தான் முடிவெடுப்போம் என்று கூறுகிற அளவிற்கு மத்திய அரசு சட்டங்களை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறது. அவர்கள் தற்போது செய்து கொண்டிருக்கிற முக்கியமான நடவடிக்கை என்னவென்று கூறினால், இந்தியாவை ஒரு ஒற்றை ஆட்சியாக மாற்றினால், ஒற்றை ஆட்சியின் கீழ் ஒரே தேசம் ஒரே பண்பாடு என்பதை உருவாக்கி மொழி வழியாக உருவாகியிருக்கிற மாநிலங்களை சிதைத்து விட்டால் இந்தியாவை ஒரு இந்து இராஷ்டிரம் அல்லது பார்ப்பனிய இராஜ்ஜியமாக மாற்றுவதற்கு வசதியாக அமைந்துவிடும், அதற்குத் தடையாக இருப்பது, தனித்தனியாக இருக்கிற மொழி வழி மாநிலங்கள், மாநிலங்களுக்கான தனித்துவமான அடையாளங்கள். இவைகள் ஒழிக்கப்பட வேண்டும் என்ற முடிவுக்கு அவர்கள் வந்து அதை நோக்கி நகர்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

இதற்கு மாற்றாக இந்தியா ஒரே தேசமல்ல பல்வேறு இனக் குழுக்கள் கொண்டது தான் இந்தியா என்று கூறுவதற்கு வந்த கொள்கை கோட்பாடுதான் திராவிடம் என்ற சித்தாந்தம்.

இந்தியா சுதந்திரத்திற்காக போராடிய அந்த நேரங்களிலேயே, பார்ப்பனிய மற்றும் பார்ப்பனிய எதிர்ப்புப் போராட்டமாக அது துவங்கிவிட்டது. திலகர் போன்றவர்கள் அப்போது காங்கிரஸ் கட்சிக்கு தலைமை தாங்கி, இந்தியாவை இந்துக்களின் நாடாக, வேதங்களின் நாடாக மாற்ற வேண்டும் இது ஆரியர்களின் நாடு என்று அவர் தலைமை தாங்கி வழி நடத்திக் கொண்டிருந்த காலகட்டத்தில் அதே காலகட்டத்தில் இந்து மகாசபையும் காங்கிரசும் கைகோர்த்துக் கொண்டு இரண்டு பேரும் இந்தியாவை ஒரு இந்து இராஜ்ஜியமாக மாற்ற முயன்று கொண்டிருந்தார்கள். காங்கிரஸ் கட்சி முழுவதும் பார்ப்பனர்கள் பிடியில் இருந்து கொண்டு இருந்தது. திலகர் மறைவிற்கு பிறகு காந்தி சுதந்திர போராட்டத்திற்கு தலைமை தாங்கினார். காந்தி அப்போது சில மாற்றங்களை செய்தார். திலகர் பேசிய இஸ்லாமிய வெறுப்பை அவர் கைவிட்டு விட்டு இஸ்லாமியர்களையும் சுதந்திர போராட்டத்தில் இணைத்துக் கொள்வேன், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 'ஹரிஜன்' என்று பெயர் சூட்டி அவர்களுடைய உரிமைகளுக்காகவும் போராடுவேன் என்று அனைவரையும் இணைத்து காந்தி போராடத் தொடங்கினார். திலகர் போன்றவர்கள் உருவாக்கிய இந்து இராஷ்டிரத்திற்கு காந்தியின் கொள்கை எதிராக அமைந்துவிட்டது என்ற காரணத்தினால் தான் கோட்சே துப்பாக்கியால் காந்தியின் உயிரைப் பறித்தார் என்பது வரலாறு.

இதே காலகட்டத்தில் தான் காங்கிரஸ் கட்சியின் தலைமை பார்ப்பனர் தலைமை ஆகிவிட்டது என்ற காரணத்தினால் தான் பெரியார் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகி சுயமரியாதை இயக்கத்தை தொடங்கினார். வடக்கே இந்து இராஷ்டிரம் பார்ப்பனர்களின் குரல் கேட்டது என்றால், தென்னகத்தில் திராவிடம் என்ற குரல் ஒலித்தது. அது இந்து இராஷ்டிரத்திற்கு எதிராக சமூகநீதி என்ற இட ஒதுக்கீட்டை முன்னிறுத்தி, சமூக சமத்துவம் என்ற ஜாதி ஒழிப்புக் கொள்கையை முன்னிறுத்தி, சமூகத்தை அடிமைப்படுத்திக் கொண்டிருக்கிற பார்ப்பன எதிர்ப்பை முன்னிறுத்தி இந்த திராவிடக் கோட்பாடு என்பது தமிழகத்தில் சுயமரியாதை இயக்கமாக அதன்பின் திராவிடர் கழகமாக அதற்கு முன் இருந்த தென்னிந்திய நல உரிமைச் சங்கமும் சுயமரியாதை இயக்கமும் இணைந்து கருக்கொண்டு உருப்பெற்று உருவானது.

திராவிடம் என்ற கோட்பாடு பார்ப்பனியம் அமைக்க இருக்கின்ற இந்து இராஷ்டிரத்திற்கு எதிரான கோட்பாடு, இதற்கான பின்னணி சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருக்கிற காலத்திலேயே உருப்பெற்று விட்டது. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் இப்போது இந்தியா முழுவதும் இந்து இராஷ்டிரமாக உருவாக்குகிற முயற்சியில் இந்த பாசிச சக்திகளான பார்ப்பனிய சக்திகள் மோடி ஆட்சியினர் நடத்திக் கொண்டிருக்கிற போது இந்தியாவின் தென்னகத்திலிருந்து எழுந்த பெரியாரின் திராவிடம் என்ற குரல் அந்தக் குரல் ஒன்றுதான் இன்றைக்கும் எதிர்ப்பாக இருக்கிறது. இந்தியாவில் இஸ்லாமியர்களை ஒழிப்பதற்கு அவர்கள் பல்வேறு திட்டங்களை தீட்டிக் கொண்டு செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொருத்தவரை இஸ்லாமியர் எதிர்ப்பு என்பதை அவர்கள் பின்னுக்கு தள்ளிவிட்டு பெரியார் எதிர்ப்பை முன்னிறுத்துகிறார்கள். பெரியார் எதிர்ப்பு, பெரியார் இயக்க எதிர்ப்பு, திராவிடர் இயக்க எதிர்ப்பு வழியாகத்தான் இங்கே தாங்கள் இந்து இராஷ்டிரத்திற்கான கதவை திறந்து விட முடியும் என்பதற்கான முயற்சிகளில் தான் இங்கே அவர்கள் தொடர்ச்சியாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

இந்து இராஷ்டிரம் பேசுகிற அந்த கும்பலுக்கும், பெரியார் இயக்கம் பேசுகிற திராவிடத்திற்கும் உள்ள வேறுபாடுகளை நாம் பார்க்க வேண்டும். நாம் ஏன் பார்ப்பன எதிர்ப்பை பேசுகிறோம்? ஹிட்லர் யூத இனத்தை அழித்து ஆரிய பெருமையை பேசினார். நாமும் பார்ப்பன எதிர்ப்பை பேசுகிறோம்; ஆனால் ஹிட்லர் பேசியதைபோல ஒரு இன வெறுப்பில் பெரியார் பேசவில்லை. பெரியாரியம் இந்த நாட்டில் கேட்டது என்னவென்றால், பார்ப்பனர்கள் அவர்களுக்கு உரிய உரிமையை அவர்கள் வைத்துக் கொள்ளட்டும், மற்றவர்களுக்கும் சமமான உரிமையை வழங்குங்கள் என்றுதான் கேட்டாரே தவிர பார்ப்பனர்களை அடியோடு அழித்துவிட்டு பார்ப்பனர் அல்லாதோர் நாட்டை உருவாக்க வேண்டும் என்று பெரியார் கூறவில்லை. நாசிசமும், பாசிசமும் வன்முறையை கையில் எடுத்ததைப் போல, பெரியார் இயக்கம் ஒரு காலத்திலும் வன்முறையை கையில் எடுத்ததில்லை. பெரியார் கடவுள் மறுப்பு, மத மறுப்பு கொள்கையை பேசினார். ஏன் பேசினார் ? இந்த பாசிச பார்ப்பனியத்தின் நச்சு சிந்தனை கடவுளின் வழியாக மக்களின் மூளைக்குள் நுழைந்து மூளைச் சலவை செய்து கொண்டிருக்கிறது. எனவே இந்த மக்களை மூளைச் சலவை செய்து காப்பாற்றி பார்ப் பனிய அடிமைச் சின்னங்களிலிருந்து வெளியேற்றவே பெரியார் கடவுள் மறுப்பைப் பேசினார்.

(தொடரும்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஒரே தேசம்; ஒரே தேர்தல் திட்டம் அதிபர் ஆட்சி நோக்கி நகர்த்தும் ஆபத்து!

**சுப. உதயகுமாரன்**

**உண்மையில் பாரதிய ஜனதா கட்சியின் சித்தாந்த குருவான ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் அறிவுரையின்படி நடத்தப்படும் திட்டம்தான் இது.**

நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்தக் கூடாது. பிரதமர் நரேந்திர மோடியின் பா.ஜ.க. அரசு தனது அடுத்த அதிரடியாக இந்தியா முழுவதும் நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்தும் திட்டத்தை அறிவிக்க அணியமாகிக் கொண்டிருக்கிறது.

நாடாளுமன்றத் தேர்தலையும், சட்டமன்ற தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்த பரிந்துரை செய்து 2016-ஆம் ஆண்டு மார்ச் மாதம் பிரதமர் மோடி தலைமை தேர்தல் ஆணையத்துக்குக் கடிதம் எழுதினர். மோடி. அப்போதைய மத்திய அமைச்சர் வெங்கையா நாயுடுவும் உடனடியாக இந்தத் திட்டத்தை ஆதரித்து நாளிதழ்களில் கட்டுரைகள் எழுதினார். உண்மையில் பாரதிய ஜனதா கட்சியின் சித்தாந்த குருவான ஆர்.எஸ்.எஸ் இயக்கத்தின் அறிவுரையின்படி நடத்தப்படும் திட்டம்தான் இது.

கடந்த 2016ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தில்லியில் நடந்த சர்வதேச வாக்காளர் விழிப்புணர்வு குறித்த கருத்தரங்கு ஒன்றை தொடங்கி வைத்துப் பேசிய இந்திய தேர்தல் கமிஷனர் நசீம் சைதியிடம் நிருபர்கள் மோடியின் பரிந்துரை பற்றி கேள்விகள் எழுப்பினர். நாடாளுமன்ற, சட்டமன்றத் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் ஒரு மனதுடன் ஒப்புக் கொண்டால் நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று நசீம் சைதி தெரிவித்தார்.

நாடாளுமன்ற, சட்டமன்ற தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவதற்கு அதிக அளவில் மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் தேவைப்படும், அவற்றை வாங்குவதற்கு ரூபாய் ஒன்பதாயிரம் கோடி வேண்டும் என்றும், கூடுதல் பாதுகாப்புப் படைகள் தேவைப்படுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தான் எடுக்கும் முடிவுகள் எல்லாம் இந்தியாவின் நீண்ட கால நலன்களை கருத்தில் கொண்டவை என்று பிரதமர் அறிவித்தவுடன், இந்தத் தேர்தல் தொடர்பான அறிவிப்பு விரைவில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப் பட்டது. பின்னர் இந்தத் திட்டத்தை அப்படியே கிடப்பில் போட்ட மோடி அரசு, அதனை மீண்டும் மெதுவாக கையில் எடுக்கிறது.

பணநீக்கம் நடவடிக்கையை அறிவித்ததுபோல 'எடுத்தேன் கவிழ்த்தேன்' என்று மோடி அரசு செயல்படக்கூடாது. நாடாளுமன்ற, சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவது பற்றிய சாதக பாதகங்களை, மக்கள் உணர்வுகளை நாடு தழுவிய அளவில் முதலில் விவாதிக்க வேண்டும்.

நாடாளுமன்றம், சட்டமன்றம், உள்ளாட்சி என ஏராளமான தேர்தல்கள் நடத்த வேண்டியிருக்கிறது; அவற்றுக்காக நிறைய பொருள் செலவாகிறது; மனித வளம் வீணாகிறது; அரச இயந்திரம் தடைபட்டு போகிறது; இயல்பு வாழ்க்கை பாதிக்கிறது; மக்களுக்கு ஏராளமான இன்னல்கள் எழுகின்றன என்றெல்லாம் ஆதரவு வாதங்கள் அடுக்கப்படுகின்றன. கடந்த 2014ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு மட்டும் ரூ.3,870 கோடி செலவு செய்யப்பட்டதாகவும், இந்த தேர்தல் செலவு தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருப்பதாகவும் 'ஒரே தேர்தல்' ஆதரவாளர்கள் வாதிடுகின்றனர். அடுத்தடுத்து தேர்தல்கள் நடத்துவதால், வளர்ச்சிப் பணிகள் தடைபடுகின்றன என்று ஒரு புதிய கதையை இப்போது சொல்கிறார் மோடி.

இவை தவிர, இந்த "ஒரே தேசம், ஒரே தேர்தல்" என்பது பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். போன்ற தேசியவாத சக்திகளுக்கு அரசியல் நலன் பயக்கும். சனநாயகத்தில் உண்மையான, ஆழமான நம்பிக்கை இல்லாதவர்கள் இவர்கள். எடுத்துக்காட்டாக, ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தின் தலைவர் (சர்சங்சலக்) தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை.

இவர்களைப் பொறுத்தவரை, இந்தியாவுக்கு அதிபர் ஆட்சி முறை வேண்டும், அனைத்து அதிகாரங்களையும் கொண்டவராக அவர் இருக்க வேண்டும். பல பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ். தலைவர்களின் பேச்சுக்களில், எழுத்துகளில், விவாதங்களில் இந்தக் கருத்து இழையோடுவதைக் காணலாம். இந்த எதேச்சாதிகார இலக்கு நோக்கிய முதல் முன்னெடுப்புத்தான் இந்த "ஒரே தேசம், ஒரே தேர்தல்" நடவடிக்கை.

அனைத்து தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவது சர்வாதிகாரத்துக்கு வழிகோலும். ஏனென்றால், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மக்களின் அனுமதியை வாங்கிவிட்டால், யாரையும் பொருட்படுத்தாமல், எந்தவிதக் கவலையுமின்றி தங்கள் வலதுசாரிக் கொள்கைகளை, திட்டங்களை, தங்களுக்கு விருப்பமான, சாதகமான நடவடிக்கைகளை எந்தவித தங்கு தடையுமின்றி நிறைவேற்றிக் கொள்ள முடியும். ஆட்சி அதிகாரத்தில் இருப்பவர்கள் அடுத்த ஐந்தாண்டு காலத்துக்கு மக்களைப் பற்றி, அவர்கள் நிலைப்பாடுகள், எண்ணங்கள், உணர்வுகள் பற்றியெல்லாம் கடுகளவும் கவலைப்பட வேண்டியதில்லை.

மக்களைப் பொறுத்தவரை, ஒரு முறை வாக்களித்துவிட்டால், தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க, ஆமோதிப்பை விலக்கிக் கொள்ள அடுத்த ஐந்தாண்டுகள் காத்திருந்தாக வேண்டும். அரசியல் ரீதியாக இது ஒரு கையறுநிலையை உருவாக்கி விடும். கடந்த 2015-ஆம் ஆண்டு இறுதியில் நடைபெற்ற பீகார் மாநிலத் தேர்தல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. அந்தத் தேர்தலில் பீகார் மக்கள் ஒன்றாக நின்று பா.ஜ.க.வை தோற்கடிக்காமல் இருந்திருந்தால், இன்று இந்தியாவின் அரசியல் நிலைமையே வேறாக இருந்திருக்கும். **அவ்வப்போது ஆங்காங்கே நடைபெறும் மாநிலத் தேர்தல்கள்தான் உள்ளாட்சித் தேர்தல்கள் இந்திய சனநாயகத்தைச் செழுமையாக்குகின்றன, உயிர்ப்பிக்கின்றன.**

மேலும், மாநிலத் தேர்தல்கள் மாநிலப் பிரச்சினைகளை முன்னிறுத்தி நடத்தப்படுபவை. இவற்றில் மாநிலக் கட்சிகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அதே போல, அண்மைக் காலங்களில் மாநிலக் கட்சிகள் மத்தியிலும் ஓரளவு பிரதிநிதித்துவம் பெற முடிகிறது. உள்ளாட்சித் தேர்தல்கள் முழுக்க முழுக்க உள்ளூர் பிரச்சனைகளை முன்னிறுத்தி நடத்தப்படுபவை. மோடி அரசின் "ஒரே தேசம், ஒரே தேர்தல்" திட்டம் இவை அனைத்தையும் அடியோடு காலி செய்துவிடும். அரசியல் என்பது ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறையோ, அல்லது அவ்வப்போதோ நிகழ்வது அல்ல. சுவாசிப்பது போல தொடர்ந்து நடப்பது அது. எனவே சட்டமன்ற, உள்ளாட்சித் தேர்தல்களும் ஆங்காங்கே அவ்வப்போது நடப்பதுதான் சரியாக இருக்கும்.

இந்த "ஒரே தேசம், ஒரே தேர்தல்" திட்டம் பல நடைமுறை சிக்கல்களையும் உருவாக்கும். ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை ஒரே தேர்தல் என்று முடிவெடுத்தால், ஏதோ காரணங்களால் நாடாளுமன்றத்தைக் கலைத்து விடுகிறோம் என்று வையுங்கள். அப்படியானால் அனைத்து சட்டமன்றங்களையும் கலைக்க வேண்டுமா என்கிற கேள்வி எழுகிறது. தேர்தல் நடந்து முடிந்த ஆறு மாதங்களுக்குள் ஒரு மாநில சட்டமன்றம் கலைக்கப்பட்டால், அடுத்த நான்கரை ஆண்டுகளுக்கு அங்கே கவர்னர் ஆட்சிதான் நடக்க வேண்டுமா? இப்படிப்பட்ட பல அரசியல் சாசனச் சிக்கல்கள் எழலாம். அரசியல் குழப்பங்கள் நிகழலாம். இந்தியத் தேர்தலும், சனநாயகமும் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு நிற்கும் இந்தத் தருணத்தில், அவற்றை இன்னும் பலவீனப்படுத்தும் 'ஒரே தேர்தல்' திட்டத்தை மோடி அரசு அரங்கேற்றக் கூடாது.

**வாசகரிடமிருந்து...**

அரசுப் பள்ளி மாணவர்களுக்கான 7.5% உள் இட ஒதுக்கீடு மூலம் மருத்துவம் படிக்க வாய்ப்பு கிடைத்த அனைத்து தம்பி, தங்கைகளுக்கும் வாழ்த்துக்கள்.

இந்த ஆண்டு நிச்சயம் சரியான மாணவர்களுக்குத்தான் வாய்ப்பு கிடைத்திருக்கும்.. ஆனால் இனிவரும் ஆண்டுகளில் இதுவே தொடருமா என்பது கேள்விக்குறிதான்?

ஆண்டு முழுவதும் நீட் கோச்சிங் செல்ல மட்டும்தான் முன்னுரிமை என்பவர்களும், பணமிருப்பவர்களும் 7.5% உள்ஒதுக்கீடு பெறும் நோக்கில் பெயரளவிற்கு பெரும் நகரங்களில் உள்ள அரசுப்பள்ளியில் சேர்த்து விடுவார்கள். அனிதாக்களின் வாய்ப்புகள் தொடர்ந்து பறிபோகும்.

உண்மையான சமுகநீதியை நிலைநாட்ட முதலில் நீட்டை ஒழிக்க வேண்டும், பிறகு அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 25% உள் இட ஒதுக்கீடு வழங்கி, அதில் 15% கிராமப்புற அரசுப்பள்ளி மாணவர்களுக்கு வழங்கினால் மட்டுமே சாத்தியம். அரசுப்பள்ளிகள் முக்கியத்துவம் பெறும், அதன் தரமும் உயரும். அதற்கு முன்பு எங்கள் ஊரைப்போன்று அரசுப்பள்ளி இல்லாத கிராமங்களில் அரசுப்பள்ளிகளை நிறுவ வேண்டும்.

**– மணிரத்தினம், அரியலூர்**

## வினா – விடை

- கரியமில வாயுவை 35 சதவீதம் குறைக்க இலக்கு; உலக நாடுகள் வியக்கின்றன. **– பிரதமர் மோடி**

  ஓ – இத்தனை சதவீதம்கூட கதை விட முடியுமா என்று வியந்திருப்பார்கள்!
- தமிழக எம்.பி. சு. வெங்கடேசன் கேள்விக்கு மத்திய அமைச்சர் இந்தியில் பதில் கடிதம். **– செய்தி**

  அவர் இன்னும் சமஸ்கிருதம் கற்றுக் கொள்ளவில்லை; வருங் காலத்தில் திருத்திக் கொள்வார்.
- செல்போன் கதிர்வீச்சில் இருந்து காப்பாற்ற 'மாட்டு சாணத்தில் சிப்'. **– மத்திய கால்நடைத் துறை அறிமுகம்**

  இப்போது 'சிப்' மட்டும்தான். அடுத்து மாட்டுச் சாண செல்போன் வரப் போகிறது!
- கார்ப்பரேட்டுகளால் திவாலாக்கப்பட்ட லட்சுமி விலாஸ் வங்கி, வெளிநாட்டு டி.பி.எஸ். வங்கியுடன் இணைக்கப்படும். **– ரிசர்வ் வங்கி**

  'லட்சுமி'யையே நாடு கடத்துகிறீர்களே, நியாயம் தானா?
- 15,000 கோடி செலவில் பங்களா – முகேஷ் அம்பானி படங்களை வெளியிட்டார். **– செய்தி**

  இந்தத் தொழில் வளர்ச்சிக்கு வங்கிகள் கடன் கொடுத்திருக்கிறதா?

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ✆ 7373684049
கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை
Karur Vysya Bank, Adyar Branch
'கரண்ட்' அக்கவுண்ட் எண் :
Current Acct No.: 1257115000002041
IFSC : KVBL0001257

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 3rd December 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN